JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC 14/2015 |
| | : | Prosecution P.W -3 |
| NAME | : | போனிபாஸ் |
| FATHER/Husband NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 24.02.2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருமலாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். சாட்சி தங்கராஜ் என்பவரை எனக்கு தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 09.04.2013 ம் தேதி மாலை 5.00 மணியளவில் எங்கள் ஊரில் உள்ள லூர்து அன்னை திருத்தளத்திற்கு போலீசார் வந்தார்கள். போலீசு அங்கு வந்து சிலையை உடைத்தது சம்மந்தமாக விசாரித்து சம்பவயிடத்தை பார்வையிட்டு படம் வரைந்து கொண்டார்கள். அதில் சாட்சியாக நானும், தங்கராஜும் கையொப்பம் செய்தோம். மேற்படி பார்வை மகஜர் அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

சவரிமுத்து எங்கள் ஊரை சேர்ந்தவர். பக்கத்து வீட்டுக்காரர். அவருடன் நான் பேசிக்கொள்வேனா என்றால் பேசுவதில்லை. எங்கள் ஊரில் இந்துவிற்கும் கிறிஸ்தவர்க்கும் பிரச்சனை உள்ளது என்றால்

தற்போது இல்லை. சமாதானமாகத்தான் இருக்கிறார்கள். அந்தோனி வியாகப்பன் மற்றும் 30 நபர்கள் மீது மற்றவர்கள் புகார் கொடுத்தார்கள் என்றாலும், அதே போல் அந்தோனி வியாகப்பன் மற்றவர்கள் 30 பேர் மீது புகார் கொடுத்தார்கள் என்றாலும் சரிதான். தற்போது சமாதானமாகத்தான் இருக்கிறார்கள். ஊரில் நான் பொருப்பில் இருந்தேனா என்றால் 2013 ம் வருடம் ஊர் பொருப்பில் இருந்தேன். அந்த நேரத்தில் சேர்ந்தமரம் காவல் நிலையத்திற்கு அடிக்கடி செல்வேன் என்றால் ஏதாவது பிரச்சனை என்றால் போவேன். காவல் துறை அதிகாரி கையெழுத்து போடுங்கள் என்று எதிலாவது சொன்னால் கையெழுத்து போடுவேன் என்றால் சரியல்ல. நான் வேறு எதும் கையெழுத்து போட்டுள்ளேனா என்றால் இந்த வழக்கிலும், வேறு ஒரு வழக்கிலும் கையெழுத்து போட்டுள்ளேன். தங்கராஜ் எனக்கு உறவினர். தனக்கும் சவரிமுத்துக்கும் பிடிக்காததால் காவல் துறையினர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.
மறுவிசாரணை– இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi